842

ARYA DHARMAM REGD. No. M. 2913
TAMIL WEEKLY.

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.	
[தபால் சிலவுள்பட]	
ஜீவிய சந்தா ...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா ...	ரூ. 3
ஆறுமாத சந்தா ...	ரூ. 1½
தனிப்பிரதி ஓரணு	
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்	

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.	
ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 21
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணு 8
நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.	

பு-25 | கும்பகோணம் விக்கிரம-ஞு சித்திரை-மீ 27உ 1940-ஞு மேமீ 9உ | ஸ-19

வாரக் குறிப்புகள்

ஸ்ரீவத்ஸ. வே. ஸோ. சர்மா

உதவிஇந்தியா மந்திரி மழுப்புகிறார் !! நமது காங்க்ரஸ் தலைவரது பலஹீநஸ்திதியை நன்கு உணர்ந்து உதவி இ. மந்திரி நம்மைக் கேலிசெய்யும் வகையில் பேசுகிறார். இப்போதாவது, முஸ்லீமிடம் தொங்கி நிற்காமல் ஆஸ்திகரை அரைவணைத்துச் செல்வாராயின் இங்ஙனமவர் பேசத்துணியார் !

வங்க மந்திரி சேன்றார் !! மலையாள முஸ்லீம் ஸபையை வியாஜமாகக் கொண்டு வங்கமந்திரியான ஓர் மஹம்மதியர் சென்னை மாகாணத்தில் பல உபன்யாஸங்களைச் செய்தார். சென்னையில் லீக்கைச் சேர்ந்தவர்கள் அவரைவரவேற்று தன்கக்ஷி பலத்தைத் தேடினர். நல்லவேளையாக விபரீதமொன்று மில்லாமல் ஊர் சென்றார்.

டில்லி ஸபையைப் போற்றுவோம் !! முன்னேற்றக் கக்ஷிஸபையின் நடவடிக்கை எல்லோராலும் போற்றப்படுகிறது, இத்தலைவர்களைக் கூடியவரை ஆதரித்து லீக் மறையும்படி செய்வது ராஜ்யதந்தரமாகும்! சுபாஷையும் ஜின்னாவையும் பிரிந்து போகாதபடி நல்லமுயற்சி செய்தல் காங்க்ரஸ் கடமையாகும் !

நல்லப்ரசாரம் செய்க !! பஞ்சமரை கிருஸ்தவராகாதபடி காக்க நமக்கு ஓர் தக்க ஸபையில்லை ! சுத்தி இயக்கம் ஆர்யஸமாஜமிவைகள் உசிதமான வேலையிலீடுபடவில்லை. ஹிந்து மாஸபை தலைவர் ஸவர்க்கர் நல்ல வேளையாக் திருவாங்கூர் செல்லுகிறார் ஆங்கு தக்க மதாபிமானத்தை ஊட்டி ஒருவரும் அன்யமதத்தை தழுவாதபடி ப்ரயதநம் செய்தால் அவரைக்கொண்டாடுவோம்.

நார்வே கதியாது? நார்வேயைப் பற்றி வருகிற செய்திகள் முன்னுக்குப்பின் முறணாகவே இருக்கின்றன இதனால் அதன்கதி அதோகதி என்றே தெரிகிறது. இப்படி ஒன்றன் பின் ஒன்றாக நாடு அழிய, உலக உத்தாரணத்திற்காக அவதரித்ததாக கூறுவோர் வாய்ப்பேச்சோடு நிற்பது விந்தை.!

ஜன்மாந்தர வாஸனையே !! திருவாரூக்கடுத்த செம்பங்குடி என்னும் கிராமத்தில் ஓர் அக்கிஹோத்ரிகளது 11வயது குமாரன் தைத்ரீய வேதத்தைப் பூர்ணமாக அத்யயநம் செய்து ஒரு தவறில்லாமல் க்ரமம் சொல்கிறான்! தமிழ் ஸம்ஸ்கிருதம் முதலிய எழுத்துக்களை நன்றாக படிக்க முடியாமலிருக்கிறான் ! சிரஜீவி சிரகாலம் வாழ்க!!

ஸநாதந தார்மிக யுவ ஸபை!! ராமேச்வரத்தில் 20வயதிற்குட்பட்ட சிறுவர் ஷடி பெயருடன் ஓர் ஸபை நடத்தி வருகின்றனர், இவர்களது சிறந்த [illegible] கண்டு ஸ்ரீ ஜகத்குரு பகவத்பாதாள் அவர்களுக்கு பூர்ண அநுக்ரஹம் செய்தார்கள் !!

கருப்பூர் மூத்ராதிகாரி முயற்சி !! சென்ற ஏகாதசி யன்று ஸ்ரீ மதாசார்ய தர்சனார்த்தம் வந்த அ. க. வி. ஸபை தர்ம ப்ரசாரகரை அழைத்து ஏகாதசி தத்துவம் ஸந்தயாவந்தநத்தின் உட்கருத்து, ஸ்திரீ தர்மம் என்ற மூன்று உபன்யாஸங்களை நடத்தினார் பலர் ச்ரத்தையுடன் கேட்டு ஆநந்தித்தனர். ஸ்ரீ சங்கர ஜயந்தியுமங்கு நடைபெறும்.

நல்ல கார்யம்! ஸ்ரீ உத்தராதிமடத்து ஸ்வாமிகள் குடந்தைக்கு விஜயம் செய்து தர்மத்தைப் பற்றி உபன்யஸிப்பதும், தர்ம விருத்தியின் பொருட்டு ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளைக் கலந்து பேசப்போவதாகவும் கேள்விப்படுவதும் ஸநாதநதர்மத்திற்கு ஓர் நல்லகாலமாம்.

ஸ்ரீ சங்கர ஜயந்திக்காக விலைகுறைவு

சென்னை அ. க. வி. ஸபையார் ஸ்ரீ சங்கர ஜயந்தி மகோத்ஸவத்தை முன்னிட்டு ஸ்ரீ சங்கரோபதேசரத்ந மெனும் நூலின் 2-ரூ விலையை 1—8—0ஆக குறைத்திருக்கின்றனர்.

அன்றியும் ஹிந்து சாஸ்த்ராசயம் எனும் 14 வித்யைகளின் விரிவை ஸ்ரீமதுஸூதந ஸரஸ்வதியின் கருத்திற்கிசைந்தபடி வெளியிட்ட அணு நாலை 0—0—6 அணுவாகவும் கொடுக்க தீர்மானித்திருக்கின்றனர். இரண்டும் கும்பகோணம் ஜனார்த்தந அச்சுக்கூடத்தில் கிடைக்கும். கார்யதர்சி

ஸுபாஷ்மீது வங்கஹிந்துக்கள் கோபம்

அமிர்தபஜார் பத்திரிகை தஹனம்.

கல்கத்தா மேயர் எலெக்ஷனில் ஸுபாஷ் கக்ஷியார் லீகை ஆதரித்து, ஹிந்துக்களுக்கு விரோதமாக நடந்ததைக் கண்டித்து வங்காளத்தில் பிரசாரம் நடக்கிறது. அமிர்தபஜார் பத்திரிகையும் போஸின் போக்கைக்கண்டித்து வருகிறது இதற்காக போஸ்சிஷ்யர்கள் ஒரு கூட்டத்தில் அமிர்தபஜார் பத்திரிகை பிரதிகளை தஹனம் செய்து ஆர்பாடம் செய்தனர்.

இலங்கையிலும் பிரிவினைப் பையித்தம்

இந்தியாவில் முஸ்லீம் ராஜ்யம், திராவிடராஜ்யமென்று தனியாக பிரித்துவிட பிரசாரம் நடப்பதுபோல், இலங்கையிலும் தமிழர் இலங்கை, சிங்களவர் இலங்கை யென்று பிரிவினைசெய்யவேண்டிக்கிளர்ச்சி ஆரம்பித்திருக்கிறது.

மிகச்சிக்கனம் பூர்ணகுணம்

'ஆத்ரேய'

குடும்ப ஔஷதப் பெட்டி.

ஸாதாரணமாக ஏற்படும் எல்லா வியாதிகளுக்கும் ஒரு சிறந்த வைத்தியருடைய உதவியைச் செய்கிறது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும், பிரயாணம் செய்வோருக்கும் அத்யாவசியமானது.

ஒரு பெட்டி விலை ரூ 5—0—0

'ஆத்ரேய'
ஆயுர் வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர் ரோடு, திருச்சிணப்பள்ளி.

திறமைவாய்ந்த எவ்வித நவீன பல் வயித்தியத்திற்கும், **டாக்டர் கோஷியே.**

பற்பொடிகளில் சிறந்தது **கிரூஸ்லீட் பற்பொடி** ஒன்றே.

கிரூஸ்லீட் பல் ஆஸ்பத்ரி, ரெயில்வே ஸ்டேஷன் எதிரில், **கும்பகோணம்.**

ஆசாரம்

(வைத்தீச்வர அய்யர் கல்கத்தா)

இது வரையில் புறச்சுத்தம் சொல்லப் பட்டது. இனி அகச் சுத்தம் சொல்லப் படும். மனது தானே நினைப்ப தல்லாது இந்திரியங்களோடு சேர்ந்து வாக்கினுலும் செய்கையினுலும் அறிந்தும் அறியாமலும் தனக்கும் பிறருக்கும் துன்பத்தை விளைவிக் கிறது. இந்த துன்பத்திற்கு இடமின்றி மனதை அடக்கி யாள்வதே அகச்சுத்தம். புறச்சுத்த மிருந்தாலன்றி அகச்சுத்தம் உண்டாகாது. இந்திரிய வியாபாரமெல்லாம் வெளிப் பொருள்களிலேயே பெரும் பாலுமிருப்பதால் அப்பொருள்கள் விஷயத்தில் சுத்தா சுத்தமிருந்தால் மனது கட்டுப்படுவதற்கு வழியுண்டு. எப்பொழுது இந்திரியங்களே அசுத்தமென்று நிச்சிய முண்டாகிறதோ அப்பொழுதுதான் மன வடக்கமும் அதனுல் அகச்சுத்தமும் ஆரம்பமாகிறது. அகச்சுத்தமே போதும் புறச்சுத்தம் வேண்டாம் என்பது அத்யாவசியத்தையும் மனதின் தொழிலடங்கிய ஞான நிலையையும் குறிக்கிறதே யன்றி மனது தன்னே நிர்மலமென்று கற்பித்துக் கொண்டு விருப்பு வெருப்புக்களுக்கு ஈடு பட்டு நடப்பதை யல்ல. நெய் இருந்தால் போதும் பால் வேண்டாமென்றுல் பால் இல்லாமல் நெய் எப்படிக் கிடைக்கும். நெய் வெகுகாலம் கெடாமலிருக்கிறதென்று பாலையும் வைத்திருந்தால் ஒரு பொழுதிற்குள் கெடுவது போல அஞ்ஞானியும் தன்னே நிர்மலனென்று நினைத்துக்கொள்ளும் பொழுதே கெடுகிறுன். வைரக்கல்லைச் சுட்டால் அடுப்புக்கரியாகிறதால் இரண்டும் ஒன்றுதான். அதே மாதிரி ஞானஜ ஞானிகளின் மனமும் ஒன்றே, மாணிக்கம் குப்பையிலிருந்தாலும் மாணிக்கமே என்றுல் ஒருவரும் குப்பையைத் தேடி அதில் மாணிக்கத்தை வைப்பதில்லை. பத்தரை மாற்றுத் தங்கத்தில் தான் வைக்கிருர்கள். அது போல அகபுறச் சுத்தங்கள். ஞானி ஆத்மாவிலேயே ரமிக்கிருன். மற்றவர்கள் வெளிப் பொருள்களில் ரமிக்கிருர்கள். ஞானியே தீர்த்தம். தீர்த்தம் என்பது அசுத்தம், தீமை, பாவம் இவை தன்னிட மில்லாததோடு பிறரிடத்திலிருந்தும் அகற்றுவது. இதற்கு திருஷ்டாந்தமாக ரேடியம் என்ற தாதுவை கொள்ளலாம்.

ஸ்ரீ மஹாபாரதம் உமாமஹேஸ்வர ஸம்வாத மொழி பெயர்ப்பை (எம்.வீ.ஆர்) ஒட்டி:—

"பொருமை, பிறர் பொருள்களில் ஆசை, துன்பம் செய்யக் கருதுவது, தர்ம கார்யத்தில் சிரத்தை யில்லாமை, பாவ கார்யத்தில் உத்ஸாகம் இவை மனதின் அசுத்தம்.

பொய், கடுஞ்சொல், நிந்திப்பது, யாருக்கும் அடங்காமல் பேசுவது, மனம் நோகப் பேசுவது, உண்மையைச் சொல்லாமலிருப்பது, இவை வாக்கின் அசுத்தம்.

புசிக்கத் தகாதவற்றைப் புசிப்பது, சேரத் தகாதவளிடம் சேருவது, பிறர் மனே புகுவது, பிற உயிர்களைக் கட்டி அடித்துப் பீடிப்பது, பிறர் பொருளை அபகரிப்பது, அபகரிக்காவிட்டாலும் அழிப்பது, களவு, சூது வேட்டை, குடி, அசுத்தமாயிருப்பது, கெட்ட ஒழுக்கம், துஷ்டர்களின் சேர்க்கை, தர்ம கார்யங்களைத் தடுப்பது, இவ்விஷயங்களில் பிறருக்கு உதவி புரிவது, பகலில் தூங்குவது இவை சரீர அசுத்தம்.

இவையெல்லாம் அறியாமலோ ஒரு சாக்குச்சொல்லியோ செய்யப்பட்டாலும் செய்தலினும் பாவம் விடாது. மனது வாக்கு செய்கைகளின் அசுத்தத்தால் பாவமுண்டாகிறதை அறிந்து அவைகளை எப்பாடு பட்டும் விட்டுவிட வேண்டும். மனதில் கள்ளமின்றி தர்மத்தைக் கருதி பாவத்திற்கு அஞ்சுவது என்பதே போதும். அதனுல் பாவங்கள் விலகிப்பரிசுத்தனுவான் இதுமுயற்சி. சான்ருேரிடம் சென்று சாஸ்திரங்களைக் கேட்பதாலும், ஐம்புலனையும் அடக்குவதனுலும், உள்ளத்தில் திருப்தியாயிருப்பதனுலும், மனஉறுதியினுலும் பாவஎண்ணங்கள் உதிக்காமல் அடங்கி விடக்கூடும். இதற்கு மேற்பட்ட தர்மமில்லை. இது விட்டுவிட்டநிலை.

உலகமெல்லாம் சுகமாயிருக்கும்படி நினைப்பதும், ஸத்தியமும், சுத்தமும், மனத்தூய்மையும், விரதங்களிலும் உபவாஸங்களிலும் ஸந்தோஷமும், காமக்ரோதங்களை விட்டு விடுவதும், மனத்தையும் இந்திரியங்களையும் அடக்குவதும்! மற்றுமுள்ள நற்கருமங்களும், பொருள்களின் உதவியின்றி சாதிக்கக்கூடிய நல்லொழுக்கம், கேட்டதையும் கண்டதையும் செய்ததையும் உள்ளபடி மாற்றுமலும் வஞ்சகமின்றியும் பேசுவது தான் ஸத்யம். ஸத்யத்தினுல் தீர்க்காயுளுள்ளவனும், ஸந்ததியின் தொடர்ச்சியைக் காப்பவனும், உலகின்வாழ்கை நிலைநிறுத்துகிற தர்மவானுமாவான். இதுவிட்டபின் தன்னை ஒழுங்குப்படுத்திக்கொள்வது. இந்நிலையை அடைந்தவனே அகச்சுத்தமுள்ளவன்.

ஆடைகளை உவர்மண்ணும், பூமியை காணமும், உலோகங்களை சாம்பலும், மரப் பாத்திரங்களை செதுக்குவதும் இழைப்பதும், மண்பாண்டத்தைச் சுடுவதும், மற்றவைகளை வெயிலும் ஜலமும் பரிசுத்தப்படுத்தும். மனிதர்களுக்கு கிருச்சரம் என்ற உபவாஸமே சுத்தம்.

பசும்பாலின் உயர்ந்த குணங்கள்.

தயிர், மோர் உபயோகப் பலன்.

(சென்ற வாரத்தொடர்ச்சி)

ஒரு விதமாகிய ஜீவ அணுக்களை குடலில் நுழைத்தால் அந்த ஜீவ அணுக்கள் குடலில் லாக்டிக்கு ஆஸிட் புளிப்பை உற்பத்தி செய்கிறது. இந்த புளிப்பு பதார்த்தத்தினுல் குடலிலிருக்கும் கிருமிகள் நாசமடைகிறது. அக்கிருமிகளுடன் கூட அதை உற்பத்தி செய்த கருவு பதார்த்தங்களும் நாசமடைகின்றன என்று டாக்டர் மேக்நிகாப் (Macknikoft) அவர்கள் எழுதியுள்ளார். இந்த விதமான வைத்தியம் செய்வதற்காகவே சவர்மில்க் (Sour Milk)கை தயார் செய்வது ஆரம்பித்திருக்கிருர்கள். சவர்மில்க் என்றுல் புளிப்பான பால் என்று பொருள். பால் புளிப்படைதல் என்றுல் தயிராக மாறுகிறது என்பது பொருள். புதியதாய் கண்டுபிடிக்கப்பட்ட இந்த வைத்திய முறையை கையாண்டு வருகிருர்கள். அவர்கள் கண்டுபிடித்த வழிதனை பலகாலத்திற்கு முன்னமேயே ஆயுர்வேதம் தயிராகவோ அல்லது மோராகவோ நாள்தோறும் உபயோகிக்க வேண்டுமென்று கூறுவதும் அவ்விதமாக இந்நாள் வரையில் இத்தேசத்தில் உபயோகிப்பதும் ஒவ்வொருநாளும் ஏற்படும் குடல் தோஷங்களை அந்தந்தநாள் மோர் உபயோகிப்பதனுல் தடுப்பதும் நடந்து கொண்டு வருகிறது. பாலை காய்ச்சி புறைகுத்துவதினுல் ஒருவிதமான புளிப்பு உண்டாக்கின்றது. அப்படி உண்டாவதற்கு ஜீவ அணுக்கள் காரணம் என்று ஆங்கில வைத்தியமுறை கூறுகின்றது.

ஆகையால் மேற்சொன்ன டாக்டர் கண்டு பிடித்தது எதுவும் புதிது அல்லவென்பது ஸ்பஷ்டம். தயிர் கடைந்தால் மோராகும். கடைகிறதினுல் அதில் இருக்கும் எண்ணைப்பொருள் வேருகிவிடும் அதை எடுத்துவிடுகிறதினுல் மோர் சீக்கிரமாக ஜீரணமாகும், தயிரில் கொஞ்சம் கனமுள்ளதாய் இருக்கிறதினுலே ஆயுர்வேதத்தில் அதை சில சந்தர்ப்பங்களிலே ஒதுக்குகிருர்கள். மோர் மாத்திரம் எந்த ஸ்திதியிலும் ஒதுக்கப்பட வில்லை. எல்லோரும் இதை அதனுல் தான் உபயோகிக்கிருர்கள். இதில் எண்ணை வஸ்து இல்லாமற் போனதினுல் பித்தாசயம் பலமற்றிருந்தாலும் அதற்குச் சம்பந்தப்பட்ட நோய்களிருந்தாலும் தடையே இல்லாமல் மோர் உபயேகிக்கிருர்கள்.

பால் விஷயத்தில் ஆங்கில சாஸ்திரமுறை இவ்வாறு கூறியுள்ளது. பாலில் மானிட சரீரத்திலுள்ள எல்லா தாதுக்களையும் போஷிக்கக்கூடிய ஆகாரப் பொருள்கள் இருக்கின்றன. மற்றும் ஜீவப்பொருள்கள் Vitamins மிகவும் அமைந்துள்ளன. இதில் ஜீவப் பொருள்கள் இருக்கிறதினுலேயே குழந்தைகளுக்கு ஏற்படும் கணச்சூடு நோயிற்கு இது மிகவும் உபயோகமாகும். பால் கொடுக்கும் ஜந்துக்களை அனுசரித்தும் பாலின் குணங்கள் மாறிக் கொண்டு வருகின்றன பசும்பாலில் 4 பங்கு மாமிசகிருத்துகள் (அல்பியூமினுயிட்ஸ்) 4 பங்கு கொழுப்பு பதார்த்தங்கள் (பாட்ஸ்) 5 பங்கு பால் சர்க்கரை, ஒரு பங்கு உப்புக்கள், 86 பங்கு தண்ணீர் இருக்கின்றன. எலும்புகள் கெட்டிப்படவும், இரத்தம் திடப்படவும் முக்கியமான கால்ஸியம் பாஸ்பெட் என்கிற பதார்த்தம் விசேஷமாக பாலில் உண்டு. இதர உப்புகளும் கொஞ்சமாக இருக்கின்றன. எருமைப் பாலில் பசும்பாலுக்கு மேல் வெண்ணெய் ஜாஸ்தி உண்டு. சர்க்கரையும் உப்புகளும் குறைவு. தாய் பாலில் கொழுப்பு பதார்த்தம் கொஞ்சம் அதிகம். உப்புகள் குறைவு. குழந்தைகளின் சரீரத்தை போஷிக்கும் பொருட்டு வேண்டிய பொருள்கள் எல்லாம் தாய் பாலில் இருக்கின்றன. ஆகையால் அவர்களுக்கு இதுபோல் அமிர்தம் வேருென்றுமில்லை. அதற்கு அப்புறம் ஆட்டுப்பால், பிறகு கழுதைப்பால், இதற்கு பிறகு பசும்பால் குழந்தைகளுக்கு ஒப்பியிருக்கும் ஆகையால் தாய்ப்பாலுக்கும் பசும்பாலுக்கும் ரொம்பவும் வித்தியாசம் இருக்கிறதென்றும் தாய்ப்பாலுக்கும் ஆட்டுப்பாலுக்கும் ரொம்பவும் உவமை யிருக்கின்றதென்றும் கழுதைப்பாலும்கூட பசும் பாலுக்குமேல் உத்தமமான ஆகாரமென்றும் தெரிய வருகிறது. மிராசுதார்.

சிதம்பரத்தில்

"ஸ்ரீ ராமநவமி உத்சவம்"

இவ்வூர் புதுத்தெரு மஹாஜனங்களால் சென்ற வருஷம் போல் இவ்வருஷமும் ஸ்ரீ ராமநவமி உத்சவம்(16—4—40)முதல் ஆரம்பிக்கப்பட்டு பிரதிதினமும் சங்கீதக் கச்சேரிகளுடன் சஹஸ்ரநாமார்ச்சனையும் வசந்தோச்சவமும் சாஸ்திரோக்தமாக உஞ்சவிருத்தியும் விசேஷமாக பிராமணசமாராதனையும் இதன்றி சுமார் 500 ஏழைகளுக்கு அன்னமும் போடப்படுவதுடன் (27—4—40-ல்) முத்துப்பல்லக்கில் ஸ்வாமியை எழுந்தருளச்செய்து பிரபல நாதஸ்வரக்கச்சேரிகளுடன் வீதிபிரலக்ஷிணமும் நடத்தப்பட்டு விழாமுடிவடைந்தது.

(ஓ.-பி.)

குடந்தையில் ஸ்ரீ உத்தராதி மடத்துக்கு ஸ்வாமிகள் விஜயம்

ஆலயப்பிரவேச சர்ச்சை

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவிராஜகாசார்ய ஸ்ரீ உத்தராதி மடம் ஸம்ஸ்தானாதிபதி ஸ்ரீ ஸத்யத்யான தீர்த்தஸ்வாமிகள் நமது நகரத்திற்கு (28—4—40) மாலை விஜயம் செய்தார்கள். அவருடைய விஜயத்தை முன்னிட்டு பிரதிதினமும் மாலை 6-மணி முதல் இரவு 8-மணிவரையில் கிருஷ்ணராயர் அக்ரஹாரம் விட்டல மந்திரத்தில் ஆலயப்ரவேசம், ப்ரௌடா விவாஹம், வர்ணாசிரமதர்மானுஷ்டானம், முதலிய விஷயங்களைப்பற்றி ஸ்ரீ ஸ்வாமிகளால் உபந்யாஸம் செய்யப்பட்டும், சபையோர்கள் அவரவர்களின் சம்சயங்களைத் தாராளமாகக் கேட்க, பரிகாரமாகும் படியான யுக்திகள் விவரிக்கப்பட்டன. ஸ்ரீமான்கள் பாகவத ரங்கனாதாசாரியார், கே. எல். வியாஸராய சாஸ்திரி எம். ராமராவ், என். ஹரிராவ், பி. வி. ராமசந்திராசாரியார் மஹாமஹோபாத்தியாயகாபே ராமசந்திராசாரியார், மஹாமஹோபாத்யாய ஆர். வி, கிருஷ்ணமாசாரியார், அக்னிஹோத்திரம் கோபாலதேசிகாசாரியார், ஆங்கரை ரங்கஸ்வாமி சாஸ்திரிகள், எஸ். மகாலிங்கய்யார், முதலியவர் விஜயம் செய்து தத்வ விசாரங்களில் கலந்து கொண்டனர். சண்டாளர்களின் ஆலயப்ரவேச விஷயமாக நிகழ்ந்த விசாரத்தின் சுருக்கமும் அடியில் கொடுக்கப்படுகிறது.

சிஷ்யர்:— சண்டாளர்களை ஏன் கோயிலில் விடக்கூடாது?

ஸ்வாமி:— அவர்கள் கோயிலுக்கு ஏன் போகவேண்டும்? அங்கு இருப்பது கல் தானே? ஒரு கல் படிகட்ட உதவுகிறது. மற்றொரு கல் கக்கூசில் போடப்பட்டிருக்கிறது. இன்னும் ஒரு கல் தூணாகவிருக்கிறது. கக்கூசில் இருக்கும் கல்லையும் மற்ற கற்களையும் விட்டு கோயிலிலுள்ள கல்லைப் பார்க்க ஏன் போகவேண்டும்?

சிஷ்யர்:— கோயிலிலுள்ள சிலையில் தெய்வத்தன்மை இருக்கிறது. மற்றகற்களில் அது இல்லை.

ஸ்வாமி:— கோயிலிலுள்ள சிலையில் மாத்திரம் தெய்வத்தன்மை ஏற்படக்காரணம் என்ன?

சிஷ்யர்:— ஆகமசாஸ்திரத்தின்படி மந்திர சக்தியால் ஆவாஹனம் செய்யப்பட்டிருப்பதால் தெய்வத்தன்மை ஏற்பட்டது.

ஸ்வாமி:— அந்த தெய்வத்தன்மை சாசுவதமாக இருப்பதா? போகக்கூடியதா?

சிஷ்யர்:— சில காரணங்களினால் போகக்கூடியதே.

ஸ்வாமி:— ஸரி எந்த ஆகமசாஸ்திரங்களினாலே ஸாந்நித்யம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறதோ அதே ஆகமசாஸ்திரங்களில் சண்டாளர்களின் பிரவேசத்தால் தேவஸாந்நித்யம் போய்விடுகிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. எப்படியென்றால் நம்மைப்போன்ற ஒருமனிதனே துரைத்தன சட்டங்களை யனுசரித்து கலெக்டர் ஆகிறான். அதே சட்டங்களை மீறி நடந்தால் கலெக்டர் அதிகாரம் போய் நம்மைப்போலவே ஆய்விடுகிறான்.

சிஷ்யர்:— நாம் சாஸ்திரத்தை ஒப்புக்கொள்ளவில்லை.

ஸ்வாமி:— அப்படியானால் கக்கூசிலுள்ள கல்லையும் மற்றகற்களையும் தொழ வேண்டுமே! தொழுகிறார்களா?

சிஷ்யர்:— சாஸ்திரம் இருக்கட்டும். சண்டாளர்களை கோயிலுக்குள் விடாவிட்டால் அவர்கள் கிறிஸ்தவமதத்தில் சேர்ந்து விடுகிறார்கள். 10 அல்லது 20 வருஷங்களில் ஹிந்துக்களின் சங்கியை குறைந்து கொண்டேவந்து ஹிந்து தர்மம் அழிந்து விடுமே!

ஸ்வாமி:— எந்த ஆகம சாஸ்திரத்தினால் தெய்வத் தன்மை வந்திருக்கிறதோ அந்த சாஸ்திரத்துக்கு விரோதமாக சண்டாளர்களை விடுவதால் ஹிந்து தர்மம் இப்போதே அழிந்துவிடுமே. 10 அல்லது 20 வருஷங்களில் அழிவது தேவலாமா? இப்போதே அழிவது தேவலாமா?

சீடர்:— ஸரி; கீதையில் "சாதுர் வர்ண்யம் மயா ஸிருஷ்டம்" என்று நன்கு வர்ணங்களே சொல்லப்பட்டுள்ளன. ஐந்தாவது ஜாதியைப்பற்றிச் சொல்லவில்லையே?

ஸ்வாமி:— கீதையின் முதல் அத்தியாயத்திலேயே "ஜாயதே வர்ணஸங்கர:" என்று ஸ்பஷ்டமாய் ஸங்கர ஜாதிகளைப் பற்றிச் சொல்லப்படிருக்கிறதே "சாதுர் வர்ண்யம்" என்ற சுலோகத்திலும் பிராம்மணன் முதலியோருக்கு அவ்வித குணங்கள் உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர அந்த குணங்களையுடையவன் பிராம்மணனாவான் என்று சொல்லப்படவில்லை (The converse is not true) என்பதை அறியவேண்டும்.

சிஷ்யர்:— ஸரி பிராம்மணர்களிலேயே அனேகர் தங்கள் அனுஷ்டானங்களைச் செய்து வருவதில்லையே!

ஸ்வாமி:— உம்முடைய மனைவியை 10 வேலைகளைச் செய்யும்படி சொல்கிறீர் அவள் 7 அல்லது 8 வேலைகளைச் செய்து மீதியை செய்யாவிட்டால் அவளைத் தள்ளிவிடுவீரா? அனுஷ்டானங்களைச் செய்யும்படித் தூண்டவேண்டும் அல்லவா?

சிஷ்யர்:— சண்டாளர்களைப் பிராம்மணர்களாக்கிப் பிறகு ஆலயப்ரவேசம் செய்விக்கலாமா?

ஸ்வாமி:— உம்முடைய கேள்வியே சண்டாளன் ஸாக்ஷாத்தாக அந்த சரீரத்துடன் பிரவேசிக்கலாகாது என்பதற்குச் சாதகமாயிருக்கிறது. அவனைப் பிராம்மணனாகச் செய்யமுடியுமா முடியாதா என்பது வேறு விஷயம். இந்த ஆலயப்ரவேசத்தில் தீக்ஷையுள்ளவர்களை அழைத்து வந்து அவர்களே எந்தெந்த கேள்வி கேட்டாலும் பதில் சொல்லதயாராயிருக்கிறோம் அவர்களை வரும்படி செய்யுங்கள்.

சிஷ்யர்:— சண்டாளர் நுழைந்த தேவாலயங்களுக்கு வைதிகர்கள் போகலாமா?

ஸ்வாமி:— வெறும் பொம்மைகளை வேடிக்கை பார்க்கப் போவதுபோல் தான் ஆகும். இதனால் பரலோக சிரேயஸ் கிடைக்காது. அங்கு தைய்வஸான்னித்ய மில்லையே.

சிஷ்யர்:— அந்தக் கோவில்களில் பூஜை செய்கிறவர்களுக்கு பிராயச்சித்தம் உண்டா?

ஸ்வாமி:— தீட்டுப்பட்டு விட்ட பிம்பங்களுக்கு வேதமந்திரங்களைச் சொல்லி பூஜை செய்வது பிராய்ச்சித்தத்திற்கு ஆஸ்பதமானது தான். (ந. தி.)

காரைக்குடி நாகனாதபுரம் தார்மிகயுவர் ஸங்கம்

பொதுகூட்டம்

ஷை சங்கத்தின் பொதுக்கூட்டம் நாகனாதபுரம் பெருமாள் கோவில் மேலவீதியில் ஸ்ரீமான் ஓ. எஸ். வி. சர்மா அய்யர்தலைமையில் நடைபெற்றது அவ்வமயம் மதுரை வ. சு. சங்கத்தலைவர் ஸ்ரீமான் என். ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் 1½ மணி நேரம் சங்கதின் நோக்கங்களையும் வாலிபர் கடமையை பற்றியும் விரிவாக சொற்பொழிவாற்றியபின்னர் காரைக்குடி வ. சு. சங்க காரியதரிசி ஸ்ரீ எஸ். வி. எம். மெய்யப்ப செட்டியார் மிகவும் உருக்கமாக 1 மணி நேரம் சொற்பொழிவாற்றினார்கள் கடைசியாக யாவருக்கும் கோவிலூர் கே. ஏ. ராமசாமி வந்தனோபசாரம் கூற இரவு 12½ மணிக்கு இனிது கலைந்தது.

காரியதரிசி

டெல்லியில் முஸ்லீம்களின் மஹாநாடு

லீக் யோஜனைகளுக்கு எதிர்ப்பு. இந்தியாவை பிரிக்கக்கூடாது.

ஏப்பிரல் 27 28-தேதிகளில் டெல்லியில் அகில இந்தியஸ்வேச்சை முஸ்லீம்களின் மஹாநாடு நடைபெற்றது, இந்தியாவின் பலபாகங்களிலிருந்தும் அநேக பிரபல முஸ்லீம்கள் அங்கு வந்திருந்தனர் கூட்டத்தில் சுமார் 50 ஆயிரம் முஸ்லீம்கள் கூடியிருந்தனராம்.

ஸிந்து பிரதமமந்திரியாயிருந்த கான் பஹதூர் அல்லாபக்ஷ் அந்தக்கூட்டத்தில் தலைமைவஹித்தார். முஸ்லீம் லீக்கின் போக்கு பலமாகக்கண்டிக்கப்பட்டது.

இந்திய முஸ்லீம்களும் இந்தியாவிற்கு சுயேச்சை வேண்டுமென்பதையே பலமாக வற்புறுத்துவதாயும், இந்தியாவைப் பிரிக்கும் யோஜனையை முஸ்லீம்கள் கண்டிப்பதாயும், முஸ்லீம்லீக்கின் போக்கை ஆக்ஷேபிப்பதாயும் பல முக்யதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பற்பல மாகாணங்களைச் சேர்ந்த பிரபல முஸ்லீம் தலைவர்கள் தீர்மானங்களை பிரரேபித்தும் ஆமோதித்தும் வெகு தீவ்ரமாகப் பேசி லீக்கைக் கண்டித்தனர்.

முஸ்லீம்களுடைய கலை, நாகரீகம் மதம், ராஜ்ய நன்மை ஆகியவைகளுக்கு பங்கமேற்படாமல் பாதுகாக்கவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

வஸந்த நவராத்ரி உத்ஸவம்

இலந்துறையில் பங்குனி-மீ அமாவாஸையை யன்றிரவு பெரிய கோவில் வஸந்த மண்டபத்தில் ஸ்ரீ அபிராமி அம்பிகையை எழுந்தருளச் செய்து வஸந்த நவராத்திரி உத்ஸவமானது உள்ளூர் ப்ரம்மஸ்ரீ சிவாசார்ய கங்கா ஜடேசசர்மா அவர்களது நன் முயற்சியால் விசேஷ அபிஷேக, அலங்கார, பூஜா, ஜப, ஸ்ரீ தேவீபாகவத பாராயண ப்ரவசனாதிகளுடன் ஸேவார்த்திகளான பக்தஜனங்கள் மனமகிழ்ந்துச்ராத்தாபக்திகளிலீடுபடுமாறு மிகுந்த விமர்சையால் நன்கு நடைபெற்றது.

"ஓர் பக்தன்"

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம-ஷூ சித்திரை-மீ 27௳

ஸ்தல ஸ்தாபனங்களில் மத விஷயம் பேசலாமா?

காந்திய காங்கிரஸானது, ஹிந்து மத, ஸமூஹ வ்யவஸ்தைகளைக் குலைக்கக் கங்கணங்கட்டி நிற்கிறதல்லவா? அதற்காக அது தனக்குக் கிடைத்த தேச, கால ஸந்தர்ப்பம் முதலியயாவற்றையும் நீதியற்ற முறையில் உபயோகித்து வருவதற்குப் பல உதாஹரணங்களை அடிக்கடி காட்டியுள்ளோம். பொது ஜனங்களின் ஸுகாதாரம் போன்ற விஷயங்களைக் கவனிக்க ஏற்பட்ட முனிஸிபாலிடி போன்ற ஸ்தாபனங்களில் கூட ஸம்பந்தமில்லாததான மத விஷயங்களைப் பற்றி காங்கிரஸ்காரர்கள் தங்களிஷ்டப்படி தீர்மானம் செய்யும் விஷமத்தையும், கொடுமையையும் பற்றி நாம் அடிக்கடி கண்டித்து வருகிறோம். சென்ற இரண்டு வருஷ காலமாக காங்கிரஸானது மாகாண நிர்வாஹத்தை ஏற்று நடத்தி வந்ததில் ஹிந்து மத விஷயமாக அது செய்து வந்த துராக்ரமங்களுக்கு கணக்கேயில்லை. பெரிய பொறுப்பு வாய்ந்த மந்திரி ஸபை முதற்கொண்டு காங்கிரஸ்கார் வசமாயிருந்த எல்லா ஸ்தாபனங்களிலும் அவர்கள் ஹிந்து மதச் சீர்திருத்த விஷம வேலை செய்யத் தொடங்கினர்கள். பொது ஜனங்களிடம் தந்திரமாக ஓட்பெற்று, மெஜாரிடி பலத்தினாலும், அதிகாரமமதையாலும், பிறரை அலக்ஷ்யம் செய்யும் துர்குணத்தாலும் அவர்கள் செய்த தீவினைகளுக்கு இன்று தக்கபலனை அவர்கள் அனுபவிக்க நேர்ந்திருக்கிறது. ஸ்வல்பகால நிர்வாஹத்திற்குள்ளேயே பிரஜைகளில் ஸகலப் பிரிவினரும் இவர்களை வெறுக்கும்படி ஏற்பட்டது கண் கூடான விஷயமல்லவா? தங்களுடைய வாழ்வு ஸ்திரமற்றதென்பதை அறியாமல் பெருத்த விஷமங்களைச் செய்து காட்டி விட்டால் அது பிற்காலத்திலும் எவ்வளவு தீங்காக நிலை பெற்று விடுகிறதென்கிற அபாயத்தை அவர்கள் உணர்ந்தார்களில்லை. இந்த மாதிரி விஷமகார்யங்களால் இன்று காங்கிரஸானது பொது ஜன ஆதரவைப் பெரிதும் இழந்து, குடத்தில் உள்ள விளக்குப் போல் ஒளிமங்கி மறைந்து போகும் நிலைமைக்கு வந்திருக்கிறது. காங்கிரஸ் செல்வாக்கு இப்போது அடியோடு குன்றிவிட்டதென்கிற உண்மையை உணர்ந்தே காந்திஜி சட்ட மறுப்பில் இறங்கத் தயங்கிகிறாரல்லவா?

மழை விட்டும் தூவான் விடவில்லை. சட்டஸபையிலிருந்து கொண்டு காங்கிரஸ்காரர் ஹிந்து மதநாசவேலை செய்து வந்தது அடங்கியிருக்க, ஸ்தல ஸ்தாபனங்களில் உள்ள காங்கிரஸ்காரர் மட்டும் இன்னும் விஷமத்தை விட்டபாடில்லை. பல முனிஸிபாலிடிகளில் காங்கிரஸ் மெஜாரிடி யிருப்பதை முன்னிட்டு அவை மதவிஷயத்தில் அதிக பிரஸங்கம் செய்து வருகின்றன. முனிஸிபாலிடிகளின் வேலையா இது? முனிஸிபாலிடிகள் நகரத்தின் ஸுகாதாராதி ஸௌகர்யங்களையும் வரிவஸூல் முதலிய குறிப்பிட்ட சிலகார்யங்களை கவனிக்கவுமே ஏற்பட்டவை. முனிஸிபல் எல்லைக்குள் பற்பல ஜாதிமத வகுப்பினர் வாழ்கின்றார்கள் வோட்டர்களாயிருந்து பிரதி நிதிகளையும் அனுப்புகின்றார்கள். அந்த விடங்களில் குறிப்பிட்ட ஒரு மதத்தின் நன்மை தீமைகளைப் பற்றிப்பேச என்னஸர்ந்தர்ப்பம்? மெம்பர்களுக்கு என்ன அதிகாரம்? மத விஷயம் பேசும்படி வோர்ட்டர்கள் இவர்களுக்கு அதிகாரமளித்தனரா? இப்படியிருக்க மெஜாரிடி பல மிருக்கிறதைர்யத்தாலும், அதிகாரமமதையாலும் எதை வேண்டுமானாலும் வியஸ்தையின்றி செய்து கொண்டுபோனால் இதற்குக் கேழ்விமுறை கிடையாதா?

மதுரையில் நடந்த ஸனாதன ஸம்மேளத்தில் இவ்விஷயமாக ஓர் முக்யத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதை நியாயபுத்தி படைத்த எவரும் மனமார ஒப்புக்கொள்வார்கள். காங்கிரஸ் மாளிகைக்குப் பண உதவி செய்வதுபோன்ற அநேக விஷயங்களில் ஸ்தலஸ்தாபனங்களைத் தடுத்து கவர்மெண்டார் உத்திரவுபிறப்பித்தது போல் இவ்விஷயத்திலும் முனிஸிபாலிடிகளின் நிர்வாகத்திற்குப் புறம்பான விஷயங்களில் அவை 'பிரவேசிக்கக் கூடாதென்று ஸர்க்கார் தடைசெய்யவேண்டியது அவச்யமாகும்.

தமிழ்நாட்டில் அநேக காங்கிரஸ் முனிஸிபாலிடிகள் தீண்டாதாரை ஹோட்டல்களில் நுழையவிடவேண்டுமென்று விஷமமாக தீர்மானம் செய்துவருகின்றன. ஸமீபத்தில் பம்பாய் கார்ப்பொரேஷனில் இத்தகைய தீர்மானம் செய்யப்பட்டபோதிலும், அதன் கமிஷனரும் கார்ப்பொரேஷன் வக்கீலும் அந்தத் தீர்மானம் சட்டப்படி செல்லாதென்றும் முனிஸிபாலிடியின் நோக்கத்திற்கும், அமைப்பிற்கும் ஸம்பந்தமற்ற விஷயமென்றும் உதறித்தள்ளிவிட்டனர். நியாயபுத்படைத்த எவரும் இதை அங்கீகரிப்பார்கள்.

காங்கிரஸ்காரர் காட்டிய கெட்ட வழக்கத்தை அவர்களுக்குப் பிறகு வருகிற கக்ஷியாரும் பின்பற்றுவார்கள். காங்கிரஸ்காரரே சாச்வதமானவர்களல்ல, இதரக் கக்ஷியார் ஏதாவது செய்தால் அப்போது காங்கிரஸ்காரர்கள் அது முனிஸிபாலிடிக்கு ஸம்பந்தமில்லாத விஷயமென்று ஓலமிடுவது வழக்கம். ஆனால்தாங்கள் செய்தாலோ அது நியாயமாம். கவர்ன்மெண்டார் இதில் உடனே கவனம் செலுத்தி தக்க நடவடிக்கை எடுக்கவேணும்.

கும்பகோணம் அத்வைதஸபை
ஸ்ரீ சங்கர ஜயந்தி உத்ஸவம்

நாளது விக்ரம-ஷூ சித்திரை மீ 30௳ (12—5—40) ஸ்ரீ மடத்தில் நடைபெறும் ஸ்ரீ சங்கர ஜயந்தி உத்ஸவத்தை முன்னிட்டு ஸ்ரீ ஜகத்குரு ஆசார்யாள் ஆக்ஞைப்படி கும்பகோணம் அத்வை ஸபை ஆதரவில் ஸ்ரீ மடத்தில் 9—5—40 முதல் 12—5—40 முடிய பிரதி தினம் மாலை 6-30 மணி முதலும் 12—5—40 காலை 9 மணி முதல் அடியில்கண்டபடி வித்வான்களால் உபன்யாஸம் நடைபெறும்.

1. 9—5—40 வியாழன், ஆங்கரை பிரம்மஸ்ரீ ரங்கஸாமிசாஸ்திரிகள்—உபதேச ஸாஹஸ்ரீ ஸூக்ஷ்மதா வ்யாபிதாபிரகரணம். த்ருசி ஸ்வரூப பரமார்த்த தர்சனப்ரகரணம்
2. 10—5—40 வெள்ளி, திருவாதி பிரும்மஸ்ரீ விசுவநாத சாஸ்திரிகள், —தசச்லோகீ.
3. 11—5—40 சனி, வேப்பத்தூர் பிரும்மஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகள் — விவேக சூடாமணி—பஞ்சகோச விவேகம்.
4. 12—5—40 ஞாயர், காலை விக்ரபாண்டியம் பிரும்மஸ்ரீ கோபால சாஸ்திரிகள்—பிரபோத சுதாகரம்— பிரபோத பிரகரணம் முதல் 4 ப்ரகரணம்.
5 ஷை மாலை திருவாதி பிரும்மஸ்ரீ விசுவநாத சாஸ்திரிகள் — ஸநத்ஸுஜாதீய பாஷ்யம்.

எம். கே. வைத்யநாதய்யர்,
—— ஸபை காரியதரிசி.

ஸ்ரீ அஹோபில மடம்
ஸ்ரீரங்கம்

1—5—40-௳ யன்று ஸ்ரீ அஹோபில மடத்தில் (ஸ்ரீரங்கம் தசாவதார ஸன்னிதியில்) 41 வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் பரமஹம்ஸ இத்யாதி ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ லெக்ஷ்மி நரஸிம்ம சடகோப யதீந்திர மஹாதேசிகன் ஸன்னதியில் ஸ்ரீபகவத் விஷயம் எனும் கிரந்தம் நிர்விக்னமாய் சாற்றுமுறை செய்யப் பட்டது. இந்த கிரந்தம் சுமார் 9 மாதமாய் நிர்விக்னமாய் நடந்தேறியது. அநேகதடவை, கிரந்தகாலக்ஷேபங்கள் இந்த அழகிய சிங்கர் ஸாதித்திருந்த போதிலும் இப்பொழுது இந்த 86 வது திருநக்ஷத்திரத்தில் தனது சிரமம் பாராது மிகவும் உத்ஸாகத்துடனும் தெளிவாகவும் ஸாதித்தது வியக்கத் தக்கது. சிஷ்யகோடிகள், இவ்வளவு அசக்தியோடு ஸாதித்த விஷயத்தை விண்ணப்பம் செய்ய இந்த ப்ரவசன விஷயத்திலும் பகவத் கைங்கரிய விஷயத்திலும் தமக்கு பால்யம் இருப்பதாகவும் உத்ஸாக முண்டாவதாகவும் ஸ்ரீஅழகிய சிங்கர் அழகாய் அருளிச் செய்தார். பிறகுஸம்பாவனைகள் முறையே செய்யப்பட்டன.

ஸ்ரீ தசாவதாரப் பெருமாள் ஸன்னிதியில் ஜீர்ணோத்தாரணமும் உபக்ரமித்து நடந்து வருகிறது. இது ஜீர்ணோத்தாரணம் செய்து வெகு நாளானதாயும் தெரிகிறது. என்று ஸ்ரீ காரியம் ஸ்ரீமான் அம்.வ. நரஸிம்ஹாச்சாரியார் அறிவிக்கிறார்.

தமிழர்களுக்குத் தனிமதம்!
சென்னையில் ஆலோசனைக் கூட்டம்

தமிழர்களுக்குத் தனியான மதம், தெய்வம், கலை, நாகரீகம், ஸமுதாய ஏற்பாடுகள் ஆகியவை உண்டா என்பதை நிர்யணிக்கச் சென்னையில் பிரபலத் தமிழர்கள் அடங்கிய ஆலோசனைக் கூட்டம் சீக்கிரத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறதாகத் தெரிகிறது.

மதுரையில் ஸனாதந மஹாஸம்மேளனம்

பிர்மாண்டமான ஊர்வலம்

10 ஆயிரம் பேர் கொண்ட கூட்டம்

முக்யமான தீர்மானங்கள்

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி மதுரை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் ஆதரவில் சென்ற புதன்கிழமை மாலை 4 மணிக்கு ஸநாதன தர்ம வித்யாலயத்திலிருந்து பெரிய ஊர்வலம் புறப்பட்டது. மதுரை நகரத்தின் சில பிரதானத் தெருக்கள் வழியாக ஊர்வலம் வெகு ஆடம்பரத்துடன் சென்றது. 5 ஆயிரம் ஜனங்கள் வரையில் அந்த ஊர்வலத்தில் உத்ஸாஹத்துடன் கலந்து கொண்டனர். 6-30 மணிக்கு ஊர்வலம் கிருஷ்ணராயர் தெப்பக்குளம் மைதானத்திற்கு வந்து சேர்ந்தது. ஊர்வலத்தில் உள்ளூர் ஸனாதன பிரமுகர்களுடன், சென்னை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சி, திண்டுக்கல், காரைக்குடி, கோட்டையூர், ஆத்தங்குடி முதலிய வெளியூர்களிலிருந்தும் அநேக ஸனாதன தர்ம பிரமுகர்கள் விஜயம் செய்து கலந்துகொண்டனர்.

பிறகு மஹாஸம்மேளனம் ஆரம்பமாயிற்று அந்த ஸம்மேளனத்தில் 10 ஆயிரம் பொது ஜனங்கள் மிகுந்த உத்ஸாஹத்துடன் கூடியிருக்கக் காணப்பட்டனர். ஒலி பரப்பும் கருவிகளும் நன்கு அமைக்கப்பட்டிருந்தன.

கோட்டையூர் ஸ்ரீமான் கே. வி. எஸ் வி. அழகப்ப செட்டியார் அவர்கள் தலைமை வஹிக்கும்படி பிரார்த்திக்கப்பட்டு பலத்த கரகோஷத்தினிடையே அக்ராஸனத்தில் அமர்ந்தார்.

தலைவரின் முன்னுரைக்குப் பிறகு பல முக்யமான தீர்மானங்கள் ஆலோசனைக்கு வந்து நிறைவேறின.

ஆலயப்பிரவேச கண்டனம்

பிறகு, 8—7—39-ல் திருட்டுத்தனமாக ஆலயப்பிரவேசம் நடத்தப்பட்டதையும், காங்கிரஸ் மந்திரி ஸபை செய்த அநீதிகளையும், மதுரை ஹரிஜன ஸேவா சங்கம் செய்த சூழ்ச்சிகளையும், பிறகு ஒன்றின் பின் ஒன்றாக நடத்தப்பட்ட அக்கிரமங்களையும், அவசரச்சட்ட ஆக்ஷியையும், அது விஷயமாக ஸனாதனிகள் செய்த கிளர்ச்சிகளையும் ஆதியோடந்தமாக விஸ்தாரமாகக் குறிப்பிட்டு, ஆலயப்பிரவேசச் சட்டத்தை உடனே சென்னை கவர்ன்மெண்டார் ரத்து செய்ய வேண்டியதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று பெரிய தீர்மானமொன்று ஆலோசனைக்கு வந்து பலத்த கரகோஷத்தினிடையே எவ்வித எதிர்ப்புமன்றி ஏகமனதாக நிறைவேறியது.

இத்தீர்மானத்தை, ராவ்ஸாஹிப் ஸ்ரீ நடேசய்யர் பிரேரேபணைசெய்தார். சென்னை ஸ்ரீமான் டி. எஸ். ராமஸ்வாமி அய்யரவர்கள் ஆமோதிக்க, ஸ்ரீ மதிகள், குப்பம்மாள், செல்லம்மாள், ஸ்ரீ மான்கள் டி. பி. ஜகதீசய்யர் ஆத்தங்குடி, ஸ்ரீ கிருஷ்ண மூர்த்திராவ் கோயம்புத்தூர், திண்டுக்கல் அட்வகேட் ஸ்ரீ மான் வி, ஆர். விச்வாநாதய்யர் ஆகியவர்கள் ஆதரித்துப் பேசினார்கள்.

அன்று இத்துடன் ஸம்மேளனம் கலைந்து மறுநாள் மீண்டும் ஷை இடத்தில் ஸ்ரீமான் செட்டியார் தலைமையில் கூடியது. அன்றும் கூட்டம் அதிகமாயிருந்தது. தீர்மானங்கள் ஆலோசனைக்கு வந்தன.

காங்கிரஸ் ஆக்ஷி கண்டனம்

காங்கிரஸ்காரர் வோட்டர்களிடம் கொடுத்த உறுதி மொழிக்கு மாறாக நடந்து கொண்டதைக் குறிப்பிட்டும் ஹிந்துமதத்தினருடைய மத உரிமைகளுக்கு பங்கம் செய்யத் துணிந்ததையும், நிலவரி முதலிய பளுக்களைக் குறைக்காமல், மேற்கொண்டும் புதிய வரிகள் மூலம் வியாபாரி, மிராசுதார், முதலாளி, லேவாதேவிக்காரர் ஆகிய எல்லா ஸமூஹத்தினரையும் கஷ்டப்படுத்தியதையும் குறிப்பிட்டு, இப்போதுள்ள சட்டஸபையானது பொதுஜன ஆதரவை இழந்து விட்டபடியால் சட்டஸபையைக் கலைத்துப் புதிய தேர்தல் நடத்தும்படி கனம் கவர்னரவர்களைக் கேட்டுக் கொள்வதாகத் தீர்மானம் நிறைவேறியது. இது ஸ்ரீமானகள் கே. கல்யாணஸுந்தரய்யரால் பிரேரேபிக்கப்பட்டு ரங்கநாத சாஸ்திரிகளால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேறியது.

ஹிந்து மஹாஸபையில் சேரக்கூடாது

அகில இந்திய ஹிந்து மஹாஸபையானது ஹிந்து மதத்திற்கும், ஜாதிப் பிரிவினை போன்ற தர்மங்களுக்கும் விரோதமாயிருப்பதால் வர்ணாச்ரமதர்மிகளான தார்மிக ஹிந்துக்கள் ஹிந்து மஹாஸபையில் சேரக்கூடாதென்றும், மூஸ்லீம் லீக் விஷயமாக ஹிந்து மஹாஸபை சொல்லுவதை மட்டும் ஆதரிப்பதாயும் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. இது ஆத்தங்குடி, ஸ்ரீ ஜகதீசய்யரால் பிரேரேபிக்கப்பட்டு, காரைக்குடி ஸ்ரீ வெங்கடாசாரியரால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேறியது.

மேலும், ஜஸ்டிஸ் கக்ஷியார், ஆதாரமற்ற ஆரிய திராவிட விவாதத்தைக் கிளப்பிவிட்டு அமைதியைக் கெடுப்பதைக் கண்டிப்பதாயும், திராவிட நாட்டுப் பிரிவினையை எதிர்ப்பதாயும், முஸ்லீம்கள், இந்து இந்தியா, முஸ்லீம் இந்தியாவென்று பிரிக்கப் பாடுபடுவதை ஆக்ஷேபிப்பதாயும், சட்ட ஸபைகளில் வைதிக ஹிந்து மதாசார்ய பிரதிநிதிகளுக்கு ஸ்தானம் ஒதுக்கித் தரவேண்டுமென்றும் சாரதாச் சட்டத்தைக் கண்டிப்பதாயும், பால்ய விவாஹம் செய்யும் வகுப்பாரை அச்சட்டத்திலிருந்து நீக்கிவிட வேண்டும், சினிமாக்களில் புராண ஸம்பந்தமாயும், மத ஸம்பந்தமாயும் ஹிந்து மத விரோதமாகக் காட்டப்படுவதைத் தடுக்க வேண்டுமென்றும், அத்தகைய படங்களை மதாசாரியர்களுக்குத் தெரிவித்து அனுமதி பெற்ற பிறகே காட்டவேணுமென்றும், மதுரை முதலிய சில முனிசிபாலிடிகள் தீண்டாமை விலக்கு, ஆலயப்பிரவேசம் போன்ற மத ஸம்பந்த விஷயங்களில் புகுந்து தீர்மானம் செய்வதைக் கண்டிப்பதாயும் அநேக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேற்படி தீர்மானங்களை ஆதரித்து ஸ்ரீமான்கள், என். ஆர். கிருஷ்ணஸாமி அய்யங்கார், செல்லையாபிள்ளை, நாராயணஸாமி சாஸ்திரிகள், கருப்பண்ணக்கோனார், மெய்யப்பசெட்டியார், ஸ்ரீநிவாஸஅய்யர், ஸரஸ்வதி அம்மாள், செல்லான் செட்டியார் முதலான அநேகர் பேசினார்கள்.

தீர்மானங்கள் நிறைவேறியபின் தலைவரின் முடிவுரை முடிந்து வந்தனோபசாரம் கூறப்பட்டு ஸம்மேளனம் வெகு சிறப்பாகப் பூர்த்தியடைந்தது. ந. நி.

பண்ருட்டி ஸ்ரீசங்கர ஜயந்தி

பிரதிவருஷம் போல் இவ்வருஷமும் நாளது விக்ரமவருஷம் சித்திரைமீ 30௳ (ச்சரியான 12-5-40 பானுவாரம் அன்று தினம் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் அவர்களின் ஜெயந்தி மகோத்ஸவம் வருகிறபடியால் அன்று தினம் வழக்கம் போல் பண்ருட்டியில் பிர்ம்மஸ்ரீ சாம்பமூர்த்தி கனபாடிகள் அவர்களால் அதிவிமர்சையாய் நடத்துவதாக உத்தேசித்திருக்கிறபடியால் ஆஸ்திக பக்த சிரேஷ்டர்கள் அனைவரும் அவரவர்களால் இயன்றளவு திரவியம் சகாயம் செய்தும் ஷை உத்ஸவத்திற்கு வந்திருந்து தெரிசனம் செய்தும் பகவத் பிரஸாதத்திற்கும் பூர்ண கடாக்ஷத்திற்கும் பாத்திரர்களாய் ஆகவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சாம்பமூர்த்தி கனபாடிகள்.

கும்பகோணம்

இந்நகர் மேலய்யன் தெரு 25 நம்பர் ரிடயர்டு ஸ்டேஷன் மாஸ்டர் ஸ்ரீ எ. வைத்தியநாதய்யர் அவர்கள் கிருஹத்தில், பொதுஜன ஆதரவில் சென்ற வெகுதான்ய ௵ மாசி மீ முதல் மன்னார்குடி பிரும்மஸ்ரீ வேத மூர்த்தி வேம்பு சாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீமத் வால்மீகி ராமாயண ப்ரவசனம் தினந்தோறும் இரவு 8 முதல் 10 மணி வரையில் நடைபெற்று வருவதில், விக்ரம ௵ சித்திரை மீ 23௳ ஞாயிற்றுக்கிழமை "ஸ்ரீ பாதுகா பட்டாபிஷேகம்" என்னும் கட்டம் வெகு விமரிசையாகவும், சிறப்பாகவும் நடந்தேறியது. ஆஸ்திக சிரோன்மணிகள் பலரும் விஜயம் செய்திருந்தனர்.

ஷை ஸ்ரீ பாதுகா பட்டாபிஷேக ஸந்தர்ப்பத்தில் ஸ்திரீகளால் விசேஷ ச்ரத்தையுடன் வெள்ளியில் தங்கமுலாம் கொடுக்கப்பெற்ற பாதுகைகளும் வெண்பட்டு வஸ்திரங்களும் சாஸ்திரிகள் அவர்களுக்கு ஸம்பாவனம் செய்யப்பட்டது பாராட்டத்தக்கது. தவிர, பொது ஜனங்களால் சாஸ்திரிகள் அவர்களுக்கு சுமார் ரூ. 100 வரையில் சேர்ப்பிக்கப்பட்டது. ஷை ராமாயண ப்ரவசனம் பொதுஜன ஆதரவில் நடைபெற்று வருவதால், ஆஸ்திக சிரோன்மணிகள் அனைவரும் தவறாமல் விஜயம் செய்து பக்தி பரவசமான, சாஸ்திரிகளின் ப்ரவசனத்தை ச்ரவணம் செய்து ஸ்ரீ ராமாபிரான் கிருபைக்குப் பாத்திரர்களாகும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. (ராம பக்தர்கள்.)

நாளது விக்ரம வருஷம் சித்திரை-மீ 21௳ (3—5—40) வெள்ளிக்கிழமை மாலை 4½-மணிக்கு கும்பகோணம் மேலமேட்டுத் தெரு ஸ்ரீ செங்கழனீர் விநாயகர் சன்னதியில் விக்ர பாண்டியம் கோபால சாஸ்திரிகள் அவர்கள் ஜடபரத உபாக்யானம் என்னும் சரித்திரத்தை வெகு விமரிசையாக உபன்யாசம் செய்தார்கள். டவுனின் பல பாகங்களிருந்தும் ஏராளமாக ஆஸ்திகர்கள் விஜயம்செய்து கதாசிரவணம் செய்தார்கள்

ஷை ஆலயத்தில் 12—5—40ல் சங்கர ஜயந்தியை முன்னிட்டு பூஜைகளும் சங்கர விஜயம் உபன்யாஸம் முதலியவைகள் 12—5—40ல் நடைபெறும். ஆஸ்திகர்கள் எல்லாரும் விஜயம் செய்ய கோரப்படுகிறது.

டி. ஜே. கிருஷ்ணமூர்த்தி,
முத்ராதிகாரி.

தேவாலயங்களும் மக்கள் கடமையும்

மூன்ருவதான தேவாலயத்தை எடுத்துக் கோள்வோம் தேவாலயமென்பது பிரதிதினமும் மக்கள் தான் செய்தகாரியங்களை நினைத்து சீர்திருந்தி மேல்லோக வழியை வேண்டும் புனிதஸ்தலமாகும். எங்கும் பரவியுள்ள கடவுளை ஒப்பொழுதும் மக்கள்நினைக்க வேண்டியவர்களென்று இந்து தருமமாயினும் பொதுப்படையாக மக்களை நல்வழியில் திருப்பவே தேவாலயங்கள். ஆகவே கட்டுப்பாடுகளும் அதிகம் தேவையாகின்றன. ஆதலால் தான் ஆலயநிர்மாணத்தையும் கடவுளாகவே எண்ணுகிறோம். கோபுரமும் கடவுளின்பாதமாக நினைக்கப்படுகிறது. இவ்வித பெரிய ஆலயங்களால் தான் எவ்வளவு மதங்கள் எற்பட்டாலும் ஹிந்து தருமம் மனதில் தோன்றிக்கொண்டு நிற்கிறது. உதாரணமாக ரயிலில் செல்லும் ஓர் மனிதனுக்கு இந்து தருமத்தை நினைப்பூட்டி கோபுரதரிசனமே கைகூப்பச்செய்யும். அச்சமயம், மனிதன் உட்காருமிடத்தை தனமூட்டைக்கு உதவிபுரிந்த அம்மனிதனே பக்கத்தில் நிற்பவனுக்கு இடந்தர இடைகிருனெற்று இவ்வசாதாரண சமயங்களிலும் மக்கள் மனதில் தரும எண்ணம் உண்டாவதற்கு கோயிலின் அமைப்பிலுள்ள நம்பிக்கையே காரணமாகும். அவ்வமைப்பிற்கும் வேதாகமமந்திரசக்திகளே காரணமாகும். இதில் நாம் தயவென்ற பெயரால் ஒருகாரியம் புதிதாகக் செய்தால் தயவிற்கு பாத்திரமாயுள்ளவர்களை இன்னும் கீழ்தள்ளுவதாகும். தருமமத்திற்கே முக்கிய அடையாளமான கடவுளின் தலையிலேயே கை வைத்தால் மக்களுக்கு பாக்கி விஷயத்திலுள்ள தருமபுத்தியும் குறையும். மாலையில் மெத்தையில் சென்று காற்று வாங்கலாம். ஒன்றுமறியாத குழந்தையிடமும் எல்லாமறிந்ததாய் தந்தையர்களிடமும் அன்பு இருக்கலாம், அவர்கள் நல்லகாற்று வாங்கவேண்டுமென்று ஆவலும் தப்பில்லை. கீழ்கட்டிடத்தில் அவர்களுக்குகிடைக்கும் காற்றில் வெறுப்பும் தோன்றுவது மனித இயற்கைதான். ஆனல் அவர்கள் படிகளில் எறமுடியவில்லை என்பதை நினைத்து மாடியைவெடிகொண்டு தாக்கினல் மெத்தை கட்டிடமே கீழ்வந்துகாற்றுக்கொடுக்காது மேல்கட்டிடமே சிதறுண்டு குடியிருக்கும் கீழ்கட்டித்தையும் தகர்த்து வீட்டில் நின்றும் வெளிசெல்லச் சக்தியில்லாதவர்களையும் தாக்கி நாசம் செய்யும். படிஅமைப்பன்னியில் மெத்தைக்குச் செல்லமுடியாது. படியை அமைத்தவரும் கடவுளே.

அதற்காக கடவுளிடம் கோபங்கொண்டால் தருமம் என்பதை வாயால் உச்சரிக்கவும் தகுதியில்லை. இவ்வித வறம்புகளை ஒழுங்காக இவ்வாலயங்களைப்பாற்ற மக்களைத் தெருத்தெருவாக கோயில் மதிலிலிருந்து மடவிளாகம், கீழரதவீதி, பிள்ளையார்தெரு என்ற காரணப்பெயர்களால் மக்கள் வாஸஸ்தலங்களையும் நியமித்துக் கொண்டவர்கள் நமது முன்னேர்கள். இத்துடன் மட்டுமா? கடவுளின் தருமகைங்கரியத்திற்கும் இரண்டு மூன்று விதமான தர்மகர்த்தர்களை ஸ்தாபித்து வைத்திருக்கின்றனர். நாளடைவில் இத்தர்மகர்தராகூில் கோயில் உத்ஸவத்தில் பொருளாதாரத்தைக்கொண்டு தீவட்டிகளை கணக்கிடுவதே நமது வேலை யென்பது, அறியாத இரண்டொருவர் சுவாமியைக்கூட திருப்பி அமைப்பார்கள்போல் தோன்றுகிருர்கள். என்செய்வது!

நெருப்புள்ளபக்கமே காற்றும் வீசிலுழிந்தது. ஆயினும் நெருப்பு மட்டும் காற்றில் கொண்டபலத்தை விட்டபடில்லை. ஆலயப்பிரவேசம் அவசரசட்டமானதும் பிரசாரங்களில் கேழ்க்கப்பட வார்த்தைகளை திருப்பிச் சொல்ல மனம் கூசுகிறது. இவ்வேகமானது சுமார் எழுகோடி மக்களை நல்பெயரால் வீழ்த்த முயன்றது. அவர்களை உயர்ந்தமனிதப்பிறயில் நின்றும் இன்னும் கீழ்தரமான பிறவிகளுக்கு வரும் ஜன்மங்களில் தூண்டியது. அவர்கள் நெடுங்காலமாய்ச் செய்து வந்த கண்ணியம்மன் முதலிய தைவபூஜைகளிலும் பலர் அசிரத்தை கொண்டிருக்கலாம். இதற்குள்ளாகவா நமது தீண்டாதகுலத்தவர்கள் மயங்குவார்கள்? அவர்களும் மற்றவர்களைப்போல் இந்துநாகரிகத்தை காப்பாற்றும் எண்ணங்கொண்டவர்களில்லையா? அல்லது அறம் என்பதற்கே வரையறுக்கப்பட்டது என்ற பொருளைக்கூட அறியாதவர்களா? பசிப்பிணியால் தவிக்கும் நமக்கு மூத்தசகோதரர்களின் ஆலயங்களில் உட்புகுந்து செல்வதால் யாது பயன்? அவ்வாலயங்களில் கடவுளைக்காணும் விஷயத்தில் நமக்குள்ள உரிமை போதாதா? வறம்பிற்கு மீறினல் பாபபுண்ணியமென்றபேச்சு எது? கடவுளை காணுவது புண்ணியமென்று சொல்லும் புத்தகங்கள் தானே ஜாதிமுறைப்படி தரிசனப்செய்யத் தூண்டுகிறதுகள். அதில்லாவிட்டால் கடவுளை காணுவது புண்ணிமென்றுயாரால் சொல்லமுடியும்? சிலதை நம்பி சிலதை விடுவதற்கு நாமென்ன தவங்களா? கூரையிலுள்ள ஒரே சுரைக்காயில் பாதியை விதைக்கு நிறுத்தி பாதியை கறிசமைக்க அரிவதுண்டா? இதுவரை நாம்நம் தெய்வமென்று நினைத்து செய்துவந்த பூஜைகள் வீண்தானு? இது நிற்க இப்பொழுது நமது வாழ்க்கை எவ்வளவு சிக்கனமாயுள்ளதோ இவ்விதம் ஆலயப்பிரவேசத்தில் ஈடுபட்டால் எவ்விதம் நடத்தஇயலும்.

கடவுளின் பெயரால் நகரங்களில் அதிகப் பழக்கங்கொண்டால், நமக்கிருக்கும் பிழைக்கும் வழியும் போய் வீண்சிலவிற்குக் காரணமான தகுதியற்ற நாகரீகத்தையல்லவா நமது மனைவிமக்கள் விரும்புவார்கள். நம் சேரி வாழ்க்கையைவிட்டு சிங்கப்பூர் முதலிய இடங்களுக்குச்சென்று நாகரீகம் என்று அநாகரீகவலையில் விழுந்து காலக்கிரமத்தில் குடிசைவாழ்விற்கும் தகுதியற்றுத் தவிக்கும் நமது சகோதரர்களை காம்காணவில்லையா? ஆகவே நம் பொருளாதாரத்திற்கும் நம் தருமத்திற்கும் ஆலயப்பிரவேசம்எற்றதல்ல, என்று எண்ணியே தீண்டாதகுலத்தவர்கள் மற்றவர்களின் தருமத்கைக் காப்பாற்றினர். அவர்கள் ஒன்றுகூடி ஆலயப்பிரவேசத்தை ஆதரித்தால் சநாதனிகள் என்னசெய்திருக்கமுடியும்? ஆனல் ஆலயப்பிரவேசத்தை உலகமே ஒன்றுகூடி எதிர்கிறது என்பது உண்மைதான். இதற்குசநாதனிகளின் தைரியத்தை காரணமாகச் சொல்லமுடியாது. நம் தேசத்தில் உள்ள தருமாபிமானிகளின் உள்ளக்கிளர்ச்சியே காரணமாகும். ஆலயதருமத்தைஅழிக்க கடவுளே நேரில் கூறியபோதிலும் அவர் சட்டமான சாஸ்திராகமங்களையே நம்மக்கள் நம்புவார்களல்லாது நேரில் கூறுபவரையும் கடவுளென்று நினைக்கமாட்டார்கள். இவ்விதம் தருமப்பற்று நம்மக்களுக்கு உண்டென்பதை விக்கிரகாராதனையைக் கண்டித்த புத்தரவதாரத்திலேயே நிச்சயம் செய்து கொண்டோம். இதையறிந்து தான் சாதாரண விஷயங்களுக்கும் ஆலோஜனைக்கமிட்டிகளை நியமித்து நாள்கடத்தும் அரசாங்க நிர்வாகிகள் இவ்விஷயத்தில் அவசரசட்டத்தை கையாண்டனர் போலும்?

கே. முத்துகிருஷ்ண சர்மா, சிதம்பரம்.

ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவம்

ஸ்ரீ சங்கர குருகுலம்

விக்ரம-ஹு சித்திரை-மீ 30-உ 12-5-40 ஞாயிற்றுக்கிழமை ஜயந்தி மஹோத்ஸவத்தை ஷை சித்திரை-மீ 26-உ (8-6-40) முதல் ஆரம்பித்து சித்திரைமீ 30உ 12-5-40 முடிய ஐந்து நாட்கள் வழக்கம் போல் விசேஷமாகக் கொண்டாடுவதாகவும் ஆசார்ய ஜயந்தி தினமாகிய (12—5—40) ஞாயிற்றுக்கிழமை புனர்வஸு நக்ஷத்ரம் கூடிய சுபதினத்தில் உதயாதி 5 நாழிகைக்குமேல் மிதுனலக்னத்தில் ஸ்ரீசங்கரகுருகுல பாடசாலையை ஆரம்பிப்பதாகவும் உத்தேசித்திருப்பதால் ஷை மஹோத்ஸவங்களுக்கு ஆஸ்திகர்களாயும் ஆசார்ய பக்தர்களாயும் உள்ள அனைவரும் வந்திருந்து ஆசார்யாளை தர்சனம் செய்து குருஸேவையில் இடுபட்டு கிருதார்த்தர்களாக வேணுமாய் கேட்டுக் கொள்ளப் படுகிறது. ஷை உத்ஸவகாலங்களில் பிரதிதினமும் காலையில் மஹந்யாஸபூர்வமாக ஏகாதசருத்ராபிஷேகமும், ப்ரஸ் தானத்ரயபாஷ்ய பாராயணமும், சங்கர விஜய பாராயணமும், பிராம்மண ஸந்தர்ப்பணமும், ஸாயங்காலங்களில் வித்வதுபன்யாஸங்களும், ராத்திரிகளில் உத்ஸவமும், ஸங்கீத கச்சேரிகளும் நடத்துவதாக இருப்பதால் ஆசார்ய பக்தர்களனைவரும் தங்களாலியன்றமட்டில் இந்த ஸத்காரியங்களுக்கு உதவிபுரியுமாறு கோரப் படுகிருர்கள்.

உ. கே. பாலசுப்ரமண்ய அய்யர்.

பழய துணிகளை வீணுக்காதீர்கள்!

பூனு சங்கத்தின் வேண்டுகோள்

ஏழைகளுக்கு உதவி

பூனுவில் வஸ்திரதான ஸங்கம் ஒன்று இருக்கிறது. அதற்கு தன் நலமற்ற பல அங்கத்தினர்கள், பொதுஜன ஸேவையையே தங்களது வாழ் நாளின் முக்கிய நோக்மாகக் கொண்டு ஊழியம் புரிந்து வருகின்றனர். சங்கத்தினர்கள் வீடுகள் தோறும் சென்று பழய துணிகளை பெற்றுக்கொண்டு சங்க காரியாலயத்தில் சேர்க்கின்றனர். தவிரவும் ஜனங்களில் பலர் தாங்களே சிரத்தை கொண்டு பழந் துணிகளை காரியாலயத்தில் குவிக்கின்றனர். அவைகளை ரக வாரியாக பிரித்து சலவை செய்து, கிழிந்தவைகளை தைத்து, உருப்படியாக இருக்கும்படி செய்கின்றனர். பழய துணிகள், உபகாரத்துக்கு அர்ஹமுள்ளவர்களான ஏழைகளுக்கும், அங்கஹீனர்களுக்கும் வினியோகம் செய்யப்படுகின்றன. அங்குள்ள பல தர்ம ஸ்தாபனங்கள், சங்கத்தின் மேற்கண்ட உபகாரத்தை பூர்ணமாக அடைந்திருக்கின்றன. சங்கம் ஆரம்பித்து இரண்டு வருஷங்கள் தான் ஆகின்றன. இதுவரை 5000 துணிகள் கொடுபட்டு இருக்கின்றன. ஜனங்களுடைய ஆதரவு தினமும் விருத்தியாய்க் கொண்டிருக்கின்றது. நம் தமிழ் நாட்டவர்கள் பூனுவின் சிறந்த உதாரணத்தை கைப்பிடித்து தங்களால் இயன்றவரை தர்மம் செய்து, பகவானது கிருபைக்கு பாத்திரர்களாகவேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

(ந.சி.)

சிரத்தை.

(காக்கழணி கிருஷ்ணமூர்த்தி)

சிரத்தையோடு கூடிய முயற்சியே பயனுடையதாகும். சிரத்தையில்லாமல் செய்யும் எம்முயற்சியும் கார்யசித்தியைத் தருவதில்லை. விசுவாச மில்லா விஷயத்தில் சிரத்தை பிறப்பதில்லை. தனக்கு ஹிதம் சொல்பவர்களின் வார்த்தையில் மட்டும் விசுவாஸமுண்டாகும், ஆப்தனின் வார்த்தையில் சிரத்தைதோன்றி, பிரவிர்த்தியுண்டாகி, பலனையடைகிறன். அதனுல், மனுஷ்யர்களுக்குப் பரமப் பிரயோஜனமான மோக்ஷத்தைப்பற்றிச் சொல்லும் வேத வாக்கியங்களை ஆப்தவாக்கியங்கள் என்று அறிஞர்கள் கொண்டாடுகிறுர்கள்.

ஒருவன் வேதத்தின் ஆப்தவாக்கியங்களை அநுசரித்து நடப்பானுனல், அவனுக்கு சன்மார்க்கப்பிரவிர்த்தியில் சிரத்தை பிறந்து, சதாசாரம் தோன்றி நன்மையை அடைகிறுன். அவனின் விடுதிகன்மவழி அவனுக்கு சிரேயஸ்ஸைத்தருகிறது.

சிரத்தையினுல், பயிரிடுவோன் தான்யத்தையும், வியாபாரி தனத்தையும், அரசன் இராஜிய லக்ஷ்மியையும், விப்பிரன் வித்தையையும், பக்தன் ஈசுவரப் பிரசாதத்தையும் தபசி உத்தம லோகத்தையும் அடைகிறுர்கள்.

இவ்விதம் நலந்தரும் ஆப்த வாக்கியத்தில் நம்பிக்கை யில்லாவிட்டால், சிரத்தையும், கார்யப் பிரவிர்த்தியு முண்டாகுமா? எதிரிலும் அசிரத்தை பிறந்து, பிரயத்தினங்ளுனற் பலனடைய முடியாமல் போகும்.

தனது தாயிடம் விச்வாசமில்லாத பாலன் எப்படி ஜீவிக்கமுடியும்? தருணனுக்கு தன் பத்னியிடம் விச்வாசமில்லாவிட்டால் அவனுக்கு சுகமேது? புத்திரனிடம் விச்வாசமில்லாத தாய்தந்தையர்களுக்கு நல்ல கெதி ஏற்படுமா? இவ்விதம், யாவரும், இயற்கையாயுள்ள விசுவாசத்தினுலேயெ, கார்யப் பிரவிர்த்திசெய்து, உஜ்ஜீவிக்கிறுர்கள். உலகங்கள்யாவும் அங்குள்ள ஜீவராசிகளின் விச்வாசங்காரணமான சிரத்தையினுல் விளங்கிகொண்டிருக்கிறது. உலக விஷயத்திற்கே சிரத்தை இன்றியமையாத சாதனமாகும்

சிரத்தை என்ற மாதாவை நாம் பணிந்தால், அதனிடம் பிரேமையுள்ளதாய்போல் வலிமையுடைய பீதிகளிருந்து நம்மை அது ரக்ஷிக்கும். சிரத்தை யினுல் சத்விஷயங்களை அறிவதில் ஸுதர்க்கம் பிறந்து, ஸுதர்க்கத்தினுல் உண்டாகும் ஆராய்ச்சியினுல், சுவானுபவமுண்டாகி இன்னதுதான் தனக்கு நன்மை தரும் என்ற மனேநிச்சயம் ஏற்பட்டு, அதை சாதித்துக்கொள்ள அவாமேலிட்டு சதாசாரப்பிரவிர்த்தியினுல் சிரேயஸ் உண்டாகி விடுகிறது.

அச்சிரத்தையோ அநவஸ்தையான குதர்க்கத்தைத் தோன்றச்செய்து, எதிலும், யாரிடமும், நம்பிக்கையில்லாமல் செய்துவிடும் நம்பிக்கையில்லாதவன் விகர்ப்பம் செய்துகொள்வான். விகர்ப்பமுடையவன் பாக்கியமற்றவனும், தனக்குத்தானே பகையுமானவனென்று சாஸ்திரங்களில் சொல்லப்படுகிறது. அவனுக்கு சன்மார்க்கம் கிட்டுவதரிது. சன்மார்க்க மில்லாதவனுக்கு சிரேயஸ்ஸுமில்லை,

சிரத்தாவான்கள் தங்கள் ஸூக்ஷ்மபுத்தியினுல், ஆராயு (விசாரித்தறியு) மிடத்து, எங்கும், எதிலும், எப்பவும் துக்கமே நிறைந்திருக்கிற தென்ற உண்மையைக் காண்கிறுர்கள், துக்கத்துடன் கூடிய எதுவானுலும், அது, சிரேயஸ்கரமாக மாட்டாது. எதை அடைந்த பின் ஒருவனுக்கு துக்கமே தோன்றுவதில்லையோ அதுதான் அவனுக்கு சிரேயஸ்கரமான இடம்.

தனம், பத்னி, புத்திரர்கள், யசஸ்ஸு, வித்தை, புத்தி, தேகசௌந்தர்யம், சரீர பலம் முதலானயாவற்று போக சாதனங்களையுஞ்சேர்பதில் சிரத்தையுண்டாவது சர்வஜன சகஜமாயிருக்கிறது. அவைகள் யாவும் அஸ்திரமானவைகளாயிருப்பதால் அவைகளை காலம் என்ற சர்ப்பம் விழுங்கியவுடன் துக்கமே பிராப்தமாகிறது சிரேயஸ்ஸைத்தராத அவைகளை அடைவதில் சிரத்தை பிறப்பதற்குக் காரணம் கேவலம் மோஹமே யொழியவேறல்ல.

உலகில் பலர் மோஹத்தினுல் அந்தகர்களாயிருப்பதால், சிரேயஸ் என்ற உப்பரிகைக்குச் செல்ல வழிதெரியாமல், பிரயோஜனம் என்ற ஒரு பிரமையை நினைத்து, சர்வதா பிரயோஜனமில்லாத போக்கியவஸ்துக்களை யடைவதில் அவாவடைந்து. அதிசிரமப்பட்டு அவைகளை சம்மதித்து, அவைகளாலேயேதாபப்பட்டு தபிக்கிறுர்கள். கிணற்றுத்தவளைகளுக்கு எவ்விதம் அந்த கிணற்றிலேயே உற்பத்தி இருப்பு, இறப்பு இவைகள் ஏற்படுகிறதோ, அவ்விதமே பிரமையுள்ளவர்களுக்கும் பிர்மாண்டம் என்னும் ஓர்வகூபத்தில் சிருஷ்டி, ஸ்திதி, லயங்களுண்டாகி தாபத்திரயமெனும் சம்சாரக்னியில் வேகும்படியாகிறது. இத்தகைய கஷ்டங்களைக் கண்ட பின் கூட கரை ஏறமனம் வராமல், இன்னும் ஏதோ பிரயோஜனமடைய நினைத்து, திரும்பவும் செய்யும் பிரவிர்த்தியை ஜீவத்தன்மை என அறிஞர்கள் சொல்லுகிறுர்கள். அஜ்ஜீவத்தன்மைஅழியவேண்டுமானுல், ஒவ்வொருவரும் உத்தமமார்க்கத்தில் சிரத்தையுடன் சென்று, அநுஷ்டிப்பதில் விசுவாசமுள்ளவர்களாக ஆகவேண்டியது அத்யாவச்யம்.

சன்மார்க்கப் பிரவிர்த்தியே மனதிற்குப் பெருமை தரும். தானடையும் பெருமையைத்தான் தனக்குள்ளபுகழ் எனப்படும் அப்புகழை அவமதித்து நடப்பது சதாசாரமாகாது. தன்புகழ்கெட வாழநினைப்பது,

"ஒளிஒருவற்குள்ள வெறுக்கை; இளி
ஒருவற் கஃ திறந்து வாழ்தும் எனல்,,

என்ற குறளாசிரியரின் போதனைப்படி குற்றமேயாகும். புகழைபுறக்கணிப்பவர்களின் ஒழுக்கமும் கெடும். வேதமோத மறந்தாலும் பிறவிக்குரிய ஒழுக்கங்களை கைவிடுதல் தகாததாகும், பிறப்பொழுக்கம் குன்றியவர்கள்,

"மறப்பினும் ஒத்துக்கொளலாகும்
பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக்
கெடும்,,

என்றபடி கெட்டுவிடுவார்கள் என்பது திண்ணம்.

உதாரணமாக, ஒரு பீடாதிபதியின் ஆதீனத்தில் தலைமை வகிக்கும் ஒரு அதிகாரி அப்பீடத்தின் புகழ் குன்றும் வழியில்தான் ஆளுகை செய்யலாமா? அதினும், தன்சமூகத்திற்கே அபவாதம் வரும்வழியில் அவனுளுகை தோன்றினுல், அதைத் தடுக்க முயலாமல் அசிரத்தையாயிருக்கலாமா? அவ்விதமிருந்தால், அவன் தன் பிறப்பொழுக்கத்தையும் மறந்து தனக்கும், தன் பீடாதிபதிக்கும் இழிவு தேடிக் கொண்டவனேயாவான்.
ஆத்மஞானமடையும் விஷயத்தில் சிரத்தை அவச்யமா என்பதுபற்றி கேட்க வேண்டியதென்ன! சிரத்தை தான் அவச்யம் வேண்டும்.

ஒழுக்கத்தில் மேம்பட்ட குணமில்லாதவன் எவ்வளவு மேல்ஸ்திதியை யடைந்திருந்தாலும், அவனின் கீழான குணத்தால் கடையனேயாவன். கீழான ஸ்திதியிலிருப்பவர்களுக்கு மேம்பட்ட குணமிருப்பன், இவர்கள் முன்னவனிலும் மேலானவர்களே யாவார்கள்.

"மேல் இருந்தும் மேல்அல்லார் மேல்
அல்லார்; கீழிருந்தும் கீழ் அல்லர் கீழ் அல்
லர்"

என்ற திருவள்ளுவரின் திருவாக்கு அவரவர் குணத்தின் தன்மையிலுள்ள குணதோஷத்தை நன்கு காட்டுகிறது. நன்னடையில்லா கீழ் குணமுள்ளவரின் கீழ் மேதையான மேல் குணமுள்ளவன் ஊழியஞ் செய்ய நேர்ந்தாலும்,

"ஊதியம் என்பதொருவற்கும் பேதை
யார் கேண்மை ஒரிகி விடல்"

என்னும் நியாயத்தைப் பின்பற்றி உடனே உத்தியோகத்தை விட்டு விலகிவிடுவன் பொய்ப்புகழுக்கும், போகத்துக்கும் இச்சையுள்ள லஜ்ஜை கெட்டவர்கள் அந்த கெண்ணிய முள்ளவனை இழிவு படுத்தி பேசுவது கலியின் சுபாவம். மனநிலைபெற்ற நீதிமானே அறிவீனர்களின் பழிப்பை ஒருநாளும் பொருட்படுத்தான்.

"உள்ளம் உடைமை உடைமை; பொருள்
உடைமை நில்லாது நீங்கிவிடும்"

என்ற உபதேசத்தை அவன் ஒருநாளும் மறவான், தன் தரித்திரதிசைக்காக பொருளை நாடி புகழைக்கெடுத்துக் கொள்ள அவன் ஒருநாளும் சம்மதியான்.

ஒருவன் தானடையும் நன்மையில் சிரத்தையாயிருப்பது போல், தன்னைச்சார்ந்தவர்களின் நன்மையிலும் சிரத்தை காட்ட வேண்டும். தன் சுவாதீனத்திலுள்ளவர்களின் நன்மையை நாடாதவனுக்கு பாபம் சம்பவிக்கும், பாபத்தில் பயமுள்ளவர்கள் ஒருநாளும் பிறருக்கு ஹிம்ஸை தரமாட்டார்கள், ஏனெனில், "பரோபகார: புண்யாய பாபாய பர பீடனம்" என்ற சர்வசாஸ்திர சாரம் அவர்களிடம் குடிகொண்டிருக்கிறது.

"புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்
அரிதே ஒப்புரவின் நல்ல பிற,,

என்றபடி, பரோபகாரத்தைப் போலுள்ள வேறு அரிய செய்கையை அவர்கள் இம்மை மறுமை என்ற இரண்டிடத்துங் காணமுடியுமா?

அவரவர்களின் கடமையைச் செய்வதில் சிரத்தையில்லாதவர்களுக்கு தங்கள் சம்ரக்ஷணையிலுள்ள இதரர்கள் செய்யும் பாபத்தையும் சேர்த்தடையும்படி நேரிடும்.

உதாரணமாக, ஒருமதகுரு, தன்சிஷ்யர்களுக்கு அம்மதத்தின் தத்துவங்களைப் பற்றி உபதேசித்து அவர்களை நல்வழிப் படுத்தக் கடமைப்பட்டவராவார். அக்கடமையைச்செய்வதில் அவருக்கு சிரத்தை குன்றலாமா? அந்தமதத்திற்கு துரோஹம் செய்யும் ஒரு சிஷ்யனைக் கண்டித்துத் திருத்தவோ அல்லது அவனைதிரஸ்கரிக்கவோ அக்குருவுக்கு பாத்தியமிருந்தும், அவ்வி

(தொடர்ச்சி 8 பக்கம் பார்க்க)

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும்
கைகண்ட இந்தியமருந்து
இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிருர்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்.



(7-ம் பக்கம் தொடர்ச்சி)

தம் செய்யாமலுள்ள ஒரு அசிரத்தை அவரிடம் தோன்றுமானல், அவரின் உபேக்ஷையைக் கண்டச்சில சிஷ்யர்கள் அதர்ம மார்க்கத்தில் நடந்து, பலபாகங்களுக்கு ஆளாவார்களல்லவா? பின் பாபபீருவாயுள்ள அந்தசிஷ்யர்களிடம் இந்த குருவின் உபதேசம் பயன் தருமா? பயன்தராததோடு, அச்சிஷ்யர்களின் பாபச்செயல்களுக்கு, குருபாத்யப்படும் படியாகும். சாமான்யமான ஒரு மதகுருவிற்கே பாபசம்பவம் வராமல் தன்கடமையைச் செய்வதில், இவ்வளவு பொறுப்பும், சிரத்தையும் ஏற்பட்டிருக்கிறது.

அர்த்தாதுரத்தில் சிக்கி, தனது ஆசாரானுஷ்டானங்களையே காலாகாலத்தில் செய்ய முடியாதவர்கள், யாராயிருந்தாலும் தன் கடமையைச் செய்யும் விஷயத்தில் அவர்களுக்கு சிரத்தை வருவதரிது,

நமக்குற்ற சர்வதுக்கமும் நாசமாகி, சாச்வதாநந்தப் பிராப்தி எனும் சிரேயஸ்ஸை நாமடைய நமக்கு சிரத்தை இருக்குமானல், புண்யகாரியமான பரோபகாரச் செய்கையில் சிரத்தையும், பாபகரமான துஷ்கிருத்தியத்தில் மனஞ்சொல்லாமையும் உள்ள ஒரு மனோபரிபாகத்தை முந்தி நாம் அடைய வேண்டும்.

சதாசாரத்தில் நமக்கு சிரத்தை அவச்யமென்பதை வற்புறுத்தி, அதன் விபரங்களை பகவான் தாமருளிய பகவத்கீதையின் 17-வது அத்யாயமான சிரத்தாத்திரய விபாக யோகத்தில் நன்கு போதித்திருக்கிறார். பகவானின் உபதேசாமிர்தத்தை பானம் பண்ணக்கூடிய பரிபாகிகளுக்கு ஆத்மஞானுனுஷ்டானத்தில் சிரத்தையுண்டாவது அதிசுலபம்.

கீதா உபதேசம் ஆத்மஞானுஷ்டான சிரத்தாவான்களுக்கு அதிசீக்கிரம் சிரேயஸ் உண்டாகுமென்று உறுதிசெய்வதால், நமக்கும் சுபத்தையடைவதில் சிரத்தைமேலிட அருள்புரியும்படி நாமும் சர்வேச்வரனை சதத்தமும் பணிவோமாக.

|| ஸ்ரீ: ||

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீசங்கரார்சாரிய
ஸ்வாமிகள் அவர்கள்ஸ்ரீமடம் சிஷ்யகோடிகளுக்கு செய்த

ஆக்ஞா ஸ்ரீமுகம்

பழநி ப்ரும்மஸ்ரீ சுப்பிரமணிய சிவன் அவர்களால்
ஆடக க்ஷேத்திரமென்னும்
திருவாரூர் ஸ்ரீ தியகராஜ ஸ்வாமிக்கு

121 குடம் கெங்கா தீர்த்தம் தருவித்து

விக்கிரம-ஸு ஆனி-மீ 22உ வெள்ளிக்கிழமை அமாவாஸ்யை
திருவாதிரை நக்ஷத்திரங்கூடிய சுபதினம்

5—7—40 முதல் ஆனி-மீ 32உ (15—7—40) ஸோமவாரம் முடிய 11 தினமும் 121 வைதீகர்களைக்கொண்டு ப்ரதிதினமும் ஒவ்வொருவரையும் 11 தடவை மஹன்யாஸத்துடன் ஸ்ரீமஹாருத்ரபாராயணம் செய்வித்து ஆனி-மீ 32உ (15—7—40) சோமவாரத்தன்று இரவு தக்ஷிணயன புண்யகாலத்தில் ஷை 121குடம்கெங்காதீர்த்தத்தையும் அபிஷேகம் செய்விப்பதென்றும், ஸ்ரீ வன்மீகநாத ஸ்வாமி, ஸ்ரீ கமலாம்பாள், ஸ்ரீ நீலோத்பலாம்பாள், கணபதி, சுப்ரமணியர் ஆகிய ஸ்வாமிகளுக்கும் முறையே ஜபம் செய்வித்து கெங்காதீர்த்த அபிஷேகமும், இந்த 12-தினங்களுக்கு அன்னதான தர்மமும் செய்விப்பதென்று தீர்மானம் செய்திருக்கிறபடியால், ஸ்ரீமடம் சிஷ்யகோடிகளில், ருத்ரபாராயணம் செய்யக்கூடியவர்கள் அவரவர்களால் முடிந்தவரை ஆத்மார்த்தமாக வைதீக காரியங்களை செய்துகொடுக்க வேண்டியது.

அன்னதானம் செய்துவைக்கக்கூடிய பிரமுகர்கள் 12-தினங்களில் தங்களால் எவ்வளவு தினங்களில், தானே இருந்து நிர்வகித்து நடத்திக்கொடுக்கக் கூடுமோ அவ்வளவு தினங்கள் தங்கள் சக்திக்கு தக்கவாறு நடத்திவைக்க வேண்டியது.

இவ்வித உத்தம கைங்கரியங்களை நடத்திக்கொடுத்து ஸ்ரீ தியாகராஜ பெருமான் கிருபையால் இகபர ஸாதனங்களை அடையவேண்டியது.

முகாம் அரசவனங்கோடு,
பிரமாதிஸு பங்குனிமீ 18உ

நாராயண ஸ்மிருதி:

NB:—பொருளுதவி செய்பவர்கள் கீழ்க்கண்ட விலாஸத்துக்கு அனுப்பும்படி கோரப்படுகிறது. பழனி சிவன், No. 9 சந்நிதித்தெரு, திருவாரூர், S. I. Ry.

பம்பாய் மதுவிலக்கு

அநேக சிக்கல்கள்

பம்பாய் மதுவிலக்கு ஸம்பந்தமாக அநேக சிக்கல்கள் ஏற்பட்டுவருகின்றன. ஹைகோர்ட்டு தீர்ப்பு காரணமாக கவர்னர் செய்த அவசரச்சட்டம் செல்லாதென்று வழக்கு ஆரம்பமாயிருக்கிறது பல விடங்களில் ,, கள்ளுவிற்கப்படும்,, என்ற போர்டு தொங்கவிடப்பட்டிருக்கிறதாம். அந்த விடங்களில் ஏராளமான கூட்டம் கூடுகிறதாம். மதுவிலக்குச்சட்டத்தை மீறியவர்கள்மீது கொடுக்கப்பட்டிருந்த வழக்குகள் பல வாபீஸ் வாங்கப்பட்டு விட்டனவாம்.

பஸ்லுல் ஹக்கின் ஆதரவு

இந்திய அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு வங்காள பிரதம மந்திரியான கனம் ஹக் ஒரு ஆலோசனை கூறுகிறார். அதாவது இப்போதுள்ள பிரதம மந்திரிகளும், ஏற்கனவே ராஜிநாமா செய்த காங்கிரஸ் பிரதம மந்திரிகளும் சேர்ந்த ஒரு மஹாநாட்டை நடத்தி எல்லா சிக்கல்களையும் நிவர்த்தி செய்து கொள்ளலாமென்று கள்ளிக்கோட்டை கூட்டத்தில் அவர் பேசினார். வங்காள பிரதம மந்திரியும், பஞ்சாப் பிரதம மந்திரியும் கனம் வைஸ்ராயை ஸமீபத்தில் பேட்டி கண்டு பேசப் போவதால் அதில் விசேஷம் இருப்பதாக நினைக்கப்படுகிறதாம்.

Printed by S. Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.